DB14-2-1-TA

# உங்கள் விசுவாசத்தை குறித்து உலகத்தால் கேட்கப்படும் கேள்விகள் - நிகழ்ச்சி 1

**அறிவிப்பாளர்**: ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில் இன்று, உயர்நிலை பள்ளியில் இருக்கும் போது தவறாமல் சபைக்கு சென்றுகொண்டிருந்த கிறிஸ்தவ வாலிபர்களில் 70% கல்லூரி மற்றும் பல்கலைகழகங்களில் சேர்ந்தவுடன் தங்கள் கிறிஸ்தவ விசுவாசத்தைவிட்டு பின்னடைவை சந்திக்கின்றனர் என்று புள்ளிவிபரம் கூறுகிறது. அவர்கள் வளர்க்கப்பட்ட அந்த விசுவாசத்தை விட்டு அவர்கள் பின் வாங்க காரணம் என்ன? பல்கலைகழகத்தில் இணையும் மாணவர்கள் இன்னி அவர்கள் ஞாயிறு பள்ளியில் இருக்க அவசியமில்லை என நினைக்கின்றனர். மதசார்பற்ற பேராசிரியர்கள் கிறிஸ்தவம் எப்படி துவங்கியது என்ற கேள்வியை அவர்கள் முன் வைக்கிறார்கள். இயேசு யார். அவர் மரணத்திலிருந்து உயிர்த்தார் என்று நம்பமுடியுமா? வேதம் நமக்கு எப்படி கிடைத்தது, அதில் சொல்லப்பட்டிருக்கும் காரியங்கள் அனைத்தையும் முழுமையாக நம்பலாமா?

32% கிறிஸ்தவ மாணவர்கள் தங்களுக்கு சமய நம்பிக்கையை குறித்த சந்தேகங்களினால் பின்மாற்றமடைந்ததாக சொல்கிறார்கள். அவர்களுடைய விசுவாசத்திற்கு எந்த அர்த்தமும் இல்லாமல் போயிற்று, பதிலளிக்க முடியாது என்று தோன்றும் வகையில் பல கேள்விகள் அவர்கள் முன்பாக இருப்பதுபோல நினைத்தார்கள்.

63% கிறிஸ்தவ இளைஞர்கள் இயேசுதான் உண்மையான தேவனுடைய ஒரே குமாரன் என்பதை விசுவாசிக்கவில்லை என்கின்றனர்.

51% இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தார் என்பதை நம்பவில்லை என்கின்றனர்.

68% பரிசுத்த ஆவியானவர் தேவத்துவத்தில் ஒருவர் என்பதை நம்புவதில்லை என்கின்றனர்.

33 % மட்டுமே வீட்திற்கு அடுத்தபடியாக சபைதான் தங்கள் வாழ்வில் பெரும்பங்காற்றுகிறது என்கின்றனர்.

ஆனா இந்த நிலையை மாற்றியமைக்க முடியும் என்று நம்புகிறேன். நான் நம்பிகொண்டிருந்த அனைத்தும் சவாலிடப்பட்ட என் கல்லூரியின் முதல் நாள் இன்னும் என் நினைவில் இருக்கிறது. எனவே நமது இந்த செய்திதொடருக்கு நான் வைத்திருக்கும் தலைப்பு “நம்முடைய மகன் மற்றும் மகள் கல்லூரிக்குள் நுழைவதற்கு முன்பு அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் என்ன, அவர்கள் தங்கள் விசுவாசத்தில் இடறாமல் இருக்க வேண்டும்” இந்த செய்தியானது மாணவர்களுக்கு மட்டும் என்றில்லை, கிறிஸ்துவை அறியாதவர்களோடு பணிபுரியும் ஒவ்வொரு கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும்.

இந்த காரியங்களை நம்மோடு பகிர்ந்துகொள்ள இருக்கும் இன்றைய விருந்தினர் Dr. டேரல் பாக், நமது தேசத்தில் இருக்கும் வரலாற்று இயேசுவை பற்றி எடுத்துசொல்லும் வல்லுனர்களில் ஒருவர், லூக்கா சுவிசேஷம் மற்று அப்போஸ்தலர் இரண்டையும் விளக்கும் உலக பிரசித்திபெற்ற நபராகவும் இருக்கிறார். இவர் புதிய ஏற்ப்பாடு பற்றிய ஆராய்ச்சிகளில் முதன்மை பேராசிரியராக டாலாஸ் தியோலஜிகள் செமினரியில் பணிபுரிகிறார், சுமார் 30 புத்தகங்களை எழுதி பல தொலைக்காட்சி பேட்டிகளில் பங்குபெற்றிருக்கிறார் ABC, CNN, Fox மற்றும் டிஸ்கவரி சேனல்.

***

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்சிக்கு உங்களை வரவேற்கிறோம். உங்கள் பிள்ளைகளை நீங்கள் கல்லூரிகளுக்கு நிச்சயம் அனுப்பிடுவீர்கள், ஆல்ரைட், அங்குள்ள பேராசிரியர்கள் இயேசுவையும் தேவனையும் வேதாகமத்தையும் பற்றி என்ன சொல்லித்தருகிறார்கள் என நினைக்கிறீர்கள்? அது இறைநம்பிக்கை இல்லாத கண்ணோட்டத்தை கொண்டிருக்கலாம். எப்போதாவது பிள்ளைகளை பற்றி புலம்பும் பெற்றோரின் காரணத்தை கவனித்திருக்கிறீர்களா, “என்னோட பையன் காலேஜ் போனதிலிருந்து விசுவாச பாதையை விட்டுவிட்டான்”, அது ஏன்னா கிறிஸ்தவ விசுவாசத்தை பற்றி கேள்விகளுக்கு பதிலளிக்க அவர்கள் ஆயத்தமாக இல்லை. எப்பாடி விவாதிப்பதென்று அவர்களுக்கு தெரியவில்லை. அதற்காக தான் இந்த நிகழ்ச்சியை ஒழுங்குசெய்திருக்கிறோம் அவர்களையும் உங்களையும் இதற்கு ஆயத்தப்படுத்த விரும்புகிறோம். மிகவும் எளிமையான காரியங்களை உங்கள் முன்பாக விளக்க விரும்புகிறோம் அது என்னன்னா: ஆதி கால கிறிஸ்தவர்கள் இயேசுவை பற்றி விசுவாசித்தவைகள் என்ன? இப்ப, டேரல், நமக்கு சொல்லுவார். விமர்சகர்களுடைய கருத்து என்ன, நீங்க ஒரு நாத்திக பேராசிரியராக இருந்தா, ஆதிகால கிறிஸ்தவர்களி பற்றிய கருத்தோடு இருக்கும் மானர்வர்களுக்கு எப்படி சொல்லுவீர்கள்? அவர்களுக்கு இதை பற்றி ஒன்றும் தெரியாது. இது என்னவென்று அவர்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். அதற்கு நேரமெடுக்கும். அதை விளக்கிடுங்க.

**Dr. டேரல் பாக்:** சரி, அவங்க எதிர்கொள்ளப்போகிற விஷயங்களில் ஒன்று புதிய ஏற்ப்பாட்டில் அவர்கள் பார்க்கும் அத்தனையும் பிற்காலத்தில் ஏற்ப்பட்ட விளைவுகள்தான் அது எந்தவிதத்திலும் இயேசுவிடம் நடத்தி செல்லாது என்கின்றனர். சிலர் இயேசு ஒரு சிறந்த தீர்க்கதரிசி என்கின்றனர். சிலர் அவரை நீதிநெறியை போதிக்கும் போதகர் என்கின்றனர். சில இயேசுவை உலகத்தின் முடிவை எதிர்நோக்கியிருக்கும் ஒரு தீர்க்கதரிசனத்தின் நிறைவேருதலாக இருந்தார் என்கின்றனர். சிலர் அவர் தம்மை மேசியாவாக கருதினார் அவர் ஏதோவொரு அதிகாரத்தோடு செயல்பட்டார் அவர் செய்தவை, தேவனுடைய திட்டத்தின் ஒரு பங்கு என்கின்றனர். ஆனால் அவர்கள் ஒரு விஷயத்தில் பின்வாங்குவார்கள் அவர் தேவனுடைய குமாரன் என்று தம்மை தேவ குமாரனாக நிலைபடுத்தினார், என்றோ அவர்கள் சொல்வதில். பல வகுப்புகள் இந்த நிலையை தொடுவதில்லை.

அவர்களுடைய விவாதம் என்னவென்றால் புதிய ஏற்ப்பாட்டில் காணப்படும் அனைத்தும் இயேசுவினுடைய அதிகாரத்தின் உத்வேகமாக இருக்கிறது, இயேசு மரித்துவிட்டதை ஏற்றுக்கொள்ள முடியாமல் ஆப்படி செய்ததாக சொல்கின்றனர். அதற்கு பிறகு வந்த சபை, சபைக்கு வந்தவர்கள் சொல்கிறார்கள், அதாவது, “இப்ப என்ன செய்வோம்? நமது மேசியாவை இழந்துவிட்டோம். நம்முடைய ஹீரோவை இழந்துவிட்டோம்.” உயிர்தேழுதலானது இறையியல் கருத்துகளுக்கு முற்றிலும் மாறுபட்ட கோணத்தை அளித்தது, புதிய பாதையில் காலப்போக்கில் புதிய கருத்துக்களை முன்வைத்தது, அது இயேசுவுக்கு முன்பு இல்லாத ஒரு நிலையை ஏற்ப்படுத்தி கொடுத்தது, அதை தான் புதிய ஏற்ப்பாட்டில் பார்க்கின்றோம் என்றனர்.

டெலிபோன் கேம் என்று சொல்லுகிற விதமாக அவர்கள் உபதேசத்தின் வளர்ச்சியை கணக்கிடுகின்றனர். ஆஸ்திரேலியா மற்றும் நியுசிலாந்தில் இதற்கு பயன்படுத்தும் பெயர் எனக்கு பிடிக்கும், இதை அவர்கள் சீனர்களின் முனுமுனுப்பு என்கின்றனர். அது என்னன்னா, நீங்க, ஒரு கதையை முழுமையா ஒருவரிடம் சொல்ல அது ஒவ்வொரு நபராக கடந்து போகும் வழியில் இறுதியாக உங்களிடம் சொல்லப்படும் கதை நீங்க சொன்ன கதை அந்த கதையாக இருக்காது. இதை தான் அவர்களும் செய்கிறார்கள் அதாவது தோப்பில் கொடியை முற்றிலும் துண்டித்துவிடுகிறார்கள், என்னன்னா, வேதாகமத்தில் சொள்ளப்பட்டிருப்பவைகளுகும் இயேசுவை குறித்த காரியங்களுக்கும் உள்ள தொடர்பை துண்டிக்கிறார்கள். அதில் எந்த தொடர்பும் இல்லை. அதாவது அதை அவர்கள் தொடுவதே கிடையாது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. இது எப்படின்னா ஒரு பார்டிக்கு பொய் அங்க ஒருவருடைய காதில் ஒரு விஷயத்தை சொன்னா அது அப்படியே அங்க இருக்கிற எல்லாருடைய காதுக்கும் போய் கடைசியா நம்மகிட்ட வரும்போது மொத்தமா எல்லாமே உருக்குலைந்து சிதைந்துபோயிடும். அவங்களுடைய கருத்து, ஏனன்னா, இயேசு ஆரம்பத்தில் அவருடைய கிரியைகளை செய்தார், ஆனா அது காலப்போக்கில், பல காலங்களுக்கு பிறகு, அது 100 ஆண்டுகளோ, 200 ஆண்டுகளோ, எதுவாயிருந்தாலும், இறுதியாக அது எழுதப்படும்போது, இதா உண்மை, அது முழுவதுமாய் சிதைந்துவிட்டது. அதனால் இயேசுவின் காரியங்கள் இதோடு ஒத்துப்போகவில்லை என்கின்றனர்.

**Dr. டேரல் பாக்:** அதனால வேதம் சில குறிப்பிட்ட விஷயங்களை பற்றி சொல்வது உண்மையென்று ஏற்றுக்கொள்ளமுடியாது. வகுப்பறைகளில் ஆரம்பமாகும் விவாதம் இந்த மாதிரியாக தான் இருக்கும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, ஏன்னா இது ஒரு தொலைபேசி இணைப்பு போலதான் வந்தது என்று சொல்லுகிறார்கள், அதனால அதனுடைய முடிவு இங்க இருக்கிறது, இப்படிதான் வளர்ந்தது என்கின்றனர். இது உருவாக்கப்பட்டது என்கின்றனர்.

**Dr. டேரல் பாக்:** ஆமா, அது நுட்பமானதும் கூட. அதில் என்ன காரியங்கள் இருந்தாலும், சொல்லப்பட்ட காரியங்களின் முடிவு இயேசு செய்தவற்றோடு தொடர்புடையதாகவே இருக்கும், அதனால் இது தானாக தோன்றின ஒன்று கிடையாது. சில சமயங்களில் அவர்கள் இது காலத்தை கடந்து வந்தது என்றும் சொல்லுவார்கள். ஆனா எப்படியிருந்தாலும், நீங்க இதை வாசிக்கும் போது உங்களுடைய முடிவு எப்படி

இருக்குமென்றால், ஆரம்பத்தில் இயேசுவும் அப்போஸ்தலர்களும் இடைப்பட்ட விஷயங்களை எதிர்க்கும்படியான முதல் நூற்றாண்டின் இறுதியில் உண்டான இறையியல் தாக்கத்தின் விளைவுகளை புரிந்துகொள்வீர்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. இப்ப, பள்ளி நாட்கள் நினைவிற்கு வருகிறதும அதாவது, 30-40 வருடங்களுக்கு முன்பு, உண்மையா, ஜனங்களுடைய கருத்தும், வல்லுனர்களின் கருத்தும் இதுவாகத்தான் இருந்தது, 200 ஆண்டுகளை கடந்து வந்த விஷயங்கள், ஒகே, சுவிசேஷங்களும் மற்ற புத்தகங்களும். சரி, இப்ப பின்னால திரும்பி பார்க்கலாம். இந்த சிறிய இடைவெளியை பற்றி பார்க்கலாம், ஏன்னா இந்த இடைவெளி மறைந்திருக்கிறது.

பலருடைய கருத்துப்படி புதிய ஏற்ப்பட்டு புத்தகங்கள் செய்தி மேடைகளில் வர ஆரம்பித்ததாம், சரி, இயேசு 30களில் மரித்தார், பவுலின் நிருபங்கள் 45, 50,60 களில் வந்தது அவர் 65-66களில் பதுருவோடு மரித்தார், யோவான் 95ல் மரித்தார். எல்லா அப்போஸ்தலர்களும் அந்த காலகட்டத்திற்குள் மரித்துபோனார்கள். அவர்களுடைய எழுத்துக்கள் அவர்களின் போதனைகளில் இருந்து வந்திருக்கும் என்றால், எப்படியிருந்தாலும், அவையனைத்தும், நம்மிடம் இருக்கும் தகவல்கள் அனைத்தும், 95ற்கு முன்பு வந்தது.

**Dr. டேரல் பாக்:** நம்பகமான கால இடைவெளி நமக்கிருக்கிறது, அதாவது குறைந்தது 20 ஆண்டு இடைவெளி.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, இயேசுவின் காலத்திற்கும் எழுதப்பட்டதற்கும் இடையில் 20 ஆண்டுகள். இங்க துரிதமான விதத்தில் புதிய காரியங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் என்கின்றனர். சரி, நாம, ஒரு விஷயத்தை கவனிக்கலாம்: இயேசு, நமக்கு தெரிந்தபடி, 12 அப்போஸ்தலர்களை தெரிந்தெடுத்தார். ஜனங்கள் அவர்களை ஏற்றுக்கொண்டனர் என்பது நமக்கு தெரியும். அவர்கள் பஸ்கா விற்கு பிறகு 50 நாள் பெந்தேகோஸ்தே அன்று பிரசங்கித்ததும் நமக்கு தெரியும், 3000 பேர் அன்று இரட்சிக்கப்பட்டார்கள், அதற்கு பிறகு ரோம சாம்ராஜ்யத்தில் 15 விதமான மக்கள் இனத்தாரிடம் சென்றார்கள்.

**Dr. டேரல் பாக்:** இப்ப, இப்ப நீங்க சொன்ன எல்லா விஷயங்களும் விவாதிக்கும்படியாக முன்வைக்கப்படுகிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. சரி, நான் என்ன சொல்றேன்னா, வசனங்களில் நாம் பார்க்ககூடிய சில உபதேச கூற்றுகளை எங்களுக்கு சொல்லுங்க. இதை முன்னாள் வைக்கலாம். நாங்க சும்மா சொல்லல, ஆமா, வேதாகமம் ஆவியினால் ஏவப்பட்ட தேவனுடைய வார்த்தைகள் அதனால் அதை நம்ப வேண்டும். இல்ல நாங்க என்ன சொல்ல விரும்புகிறாம என்றால், வரலாற்று நிருபங்கள், புத்தகங்கள் அனைத்தும், ஆதி கிறிஸ்தவர்களின் மத்தியில் சம்பவித்த எந்த காரியத்திற்கும் முன்பாகவே இருந்த வரலாற்று பதிப்புகளாக இருந்தவை.

**Dr. டேரல் பாக்:** அதை பெரும்பாலானோர் உண்மையென்று ஒப்புக்கொள்கிறார்கள். வேறுவார்த்தையில் சொன்னால், புதிய ஏற்ப்பாட்டில் சொல்லப்பட்ட அனைத்தும் ஆதிமுதலாக இருப்பவற்றின் பதிவுகள்தான். சரி, சிலர் இவை நம்முடைய ஆரம்பகால ஆதாரங்கள் என்கின்றார், ஏன்னா சிலர் இதனோடு தோமா நற்செய்தியையும் மற்ற

நூல்களையும் இணைத்திட முன்வந்தனர். இவைகளும் அந்த கால கட்டத்தில் உண்டாது என்கின்றனர். விவாதங்களில் இந்த கருத்தும் உள்ளது. ஆனால் இங்கு சொல்லப்படுகிற காரியம் என்னவென்றால் பவுலின் நிருபங்கள் எழுதப்பட்ட காலம் வரையில் 20 ஆண்டுகள் இடைவெளி இருக்கிறது, அதிலிருந்துதான் 90வது வருடங்களில் யோவான் சுவிசேஷமும் எழுதப்பட்டது. எனவே, இப்ப 60ஆண்டுகளை கடந்து வந்திருக்கிறோம். சுவிசேஷங்கள் அனைத்தும் 60களிலிருந்து 90களுக்குள் எழுதப்பட்டவைகளாக இருக்கின்றது. அதை சிலர் 80-90என்கின்றனர். அப்படி பார்த்தா நாம இயேசுவை பற்றிய காரியங்களை 30-50, 60 காலங்களுக்கு பின்பு சுவிஷேஷத்தில் பார்க்கிறோம். இங்க இருக்கும் விவாதமே, அந்த இடைவெளியை பற்றிதான். அங்க என்ன நடக்கிறதென்று பாருங்கள். எங்களுடைய கருத்து என்னனா இந்த ஆதாரங்கள் அனைத்தும் நம்மை அந்த நிகழ்வுகளின் அனுபவத்திற்கே கொண்டுசெல்கிறவைகளாகவே இருக்கிறது. சொல்லப்பட்டிருக்கும் இறையியலின் சாராம்சத்தை அவை எழுதப்பட்ட நாட்களோடு ஒப்பிட்டு பார்த்து குழப்பிக்கொள்ள அவசியமில்லை.

ஏனென்றால் ஆதியில் இருந்த கிரிசிதுவின் தன்மையை பற்றிய மேலான வெளிப்பாடு இல்லாதிருந்தால் நிச்சயம் பவுலின் மனமாற்றம் என்ற நிலை உண்டாகியிருக்கிறது. எனவே இந்த நிகழ்வுகள் அனைத்தும் அதின் சாராம்சத்தை கொண்டதாகவே இருக்கிறது. அதை நமக்கு விலகும் போதனைகள் நம்மிடமிருக்கிறது. நீங்க சொன்னமாதிரி 1 கொரிந்தியரின் பதிவுகள் நம்மிடம் இருக்கிறது. ரோமர் 1:1-4 போன்ற சுருக்க உரைகளும் நம்மிடமுண்டு.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இதில் ஒருசிலவற்றை பார்க்கலாம். நான் என்ன சொல்ல வரேன்னா, இதுதான் ஆதியில் கிடைத்த ஆதாரங்கள். நீங்க நாத்திகராகவோ கிறிஸ்தவராகவோ இருக்கலாம், உண்மையில், ஆதாரங்களை பொறுத்தவரை இது உங்களை ஆதினாட்களுகே கொண்டு சென்றிடும்.

**Dr. டேரல் பாக்:** இதுதான் உண்மை. ஜனங்களின் கூற்றையும் செய்கைகளையும் நீங்கள் அறிந்துகொள்ள விரும்பினால், நம்மிடம் இருக்கும் மிகப்பெரிய ஆதாரம் இதுதான். சரி, நாத்திகரின் கருத்துபடி அங்கு இன்னும் வேறுசில காரியங்கள் நடைபெற்றுகொண்டிருந்தது என்கின்றனர். அந்த காலத்தில் ஜனங்கள் வேறு பல காரியங்களையும் நம்பினார்கள். ஆனால் அதை நிரூபிக்கும்படியான எந்த ஆதாரத்தை உருவாக்க இயலவில்லை.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. இப்ப நாங்க இந்த தகவல்களை பயன்படுத்த விரும்புகிறோம், இந்த ஆதாரங்கள், அதாவது அந்த காலத்தில், அந்த குறைந்த காலமான 20 ஆண்டுகளில், ஆதி கால கிறிஸ்தவர்கள் சொல்லிக்கொண்ட காரியங்கள் என்ன, ஓகே? அதாவது, ஒருவேளை,20ஆண்டுகால இடைவெளி உண்டாயிருந்தால், 20 ஆண்டுகளில் எந்த நிலையை அடைந்திருக்கிறோம் என்பதை பார்க்கலாமே?

**Dr. டேரல் பாக்:** சபைகளில் என்ன நடந்துகொண்டிருந்தது என்பதை துல்லியமாக நம்மால் பார்க்க முடியும், இந்த ஆவணங்களில் சொல்லப்பட்டிருக்கும் காரியங்களை குறித்து, சபைக்குள் விவாதங்களும் வாக்குவாதங்களின் சத்தமும் உயர்ந்திருந்ததை

பார்க்கிறோம். எனவே இந்த ஆவணங்களுக்கு புறம்பாக நின்று எந்த காரியங்களையும் நம்மால் பேச முடியாது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், நீங்க விளக்கி சொல்லும்படியாக சில காரியங்களை முன்வைக்கிறேன். ஒன்று கொரிந்தியர் 8, சரி, 1 கொரிந்தியர் கிபி 55ல் வெளியானது. அப்படின்னா இயேசுசென்று 25 ஆண்டுகளுக்கு பின்பு நடந்ததை பற்றி சொல்லுகிறோம். பவுல் கொரிந்தியர்களுக்கு எழுதும்போது, "உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லையென்றும் ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்றும் அறிந்திருக்கிறோம். வானத்திலேயும் பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்கள் உண்டு. இப்படி அநேக தேவர்களும் அநேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும், பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசுகிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு அவர்மூலமாய் சகலமும் உண்டாயிருக்கிறது நாமும் உண்டாயிருக்கிறோம்." சரி, நாத்திகர்கள் சில வேலைகளில் இதை தவிர்க்க நுயன்று வேறுசில தேவர்களை சொல்லிடுவார்கள். இங்க என்ன சொல்லப்படுகிறது?

**Dr. டேரல் பாக்:** சரி, இந்த நடக்கிற விஷயம், என்னன்னா, நாம தெய்வ நம்பிக்கையுடைய உலகில் இருக்கிறோம், கிரேக்க- ரோம சாம்ராஜ்யத்தில், அவர்கள் கலாசாரத்தில் பல தெய்வங்களை வழிபட்டு கொண்டிருந்தார்கள். இதற்கு மேலான ஒரு காரியமும் அங்கு நடப்பதை நாம் கவனிக்க வேண்டும் அது, மிக முக்கியமானது. பினிடேரியன் அறிக்கையின்படி இயேசுவும் தேவனும் ஒன்றாக சேர்க்கப்பட்டு அவர்கள் சிருஷ்டிப்பின் தேவன் என்று சொல்லப்படுகிறார்கள். இயேசு ஒரு சிருஷ்டிப்பு அல்ல. தூதர்கள் சிருஷ்டிகள். சிலர் இப்படியாக சொல்கிறார்கள், "ஓ, சரி, இயேசு உயர்த்தப்பட்டார் என்பது அவர் உயர்ந்த ஸ்தானத்தை அடைந்ததை குறிக்கிறது. அவர் ஒரு தூதனாக பயணத்தை தொடர்ந்து உயர்த்தப்பட்டு பிதாவின் வலதுபாரிசத்தில் அமர்த்தப்பட்டார்." இல்லை, அப்படி நடக்காது. ஆதி திருச்சபைகள் ஆதியில் கொண்டிருந்த அறிக்கை என்னவென்றால், இயேசு சிருஷ்டிகராகவே இருந்தார், சிருஷ்டிப்பில் அவரும் தெய்வத்துவத்தில் ஒருவராக இருந்தார். அவர் சிருஷ்டிக்கப்பட்டவராக இல்லை அவரே சிருஷ்டிகர். அவர் ஆதியிலிருந்து இருக்கிறவர். அவர் சிருஷ்டிப்பின் பொது இருந்தார். அவர் ஞானத்தோடு இணைந்திருந்தார். இயேசு ஆதிமுதலாய் இருக்கிறார் என்பதை பிரதிபலிக்கும் படியான இந்த உபதேசம்தான் ஆதிமுதலாக சொல்லப்பட்டு வந்ததாக இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. இப்போது ஒரு இடைவேளை எடுத்துக்கொள்வோம், நாம் திரும்பி வந்ததும் இன்னும் ஒரு காரியத்தை குறித்து பார்த்திட இருக்கிறோம். இதை தான் நாம் இறையியலின் மையப்பொருள் என்று சொல்லுகின்றோம், அல்லது கிறிஸ்தவர்களின் நம்பிக்கையின் அடித்தளம் என்கிறோம், அதைதான் புதிய ஏற்ப்பாட்டின் 27 புத்தகங்களிலும் பார்க்க முடியும். நம்பப்படுகிற சில அடிப்படையான நம்பிக்கைகள் இருக்கிறது, அது ஆதியிலிருந்து இருக்கிறது. முதலில் இயேசு தேவனாகவும் மனிதனாகவும் இருந்தார் என்பதை பற்றி பேச இருக்கிறோம், சரியா. இணைந்திருங்கள். மீண்டும் வரும்போது இவைகளை பற்றி பேசிடலாம்.

***

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக. இப்போது Dr.டேரல் பாக்குடன் பேசிக்கொண்டிருக்கிறோம், அவரிடம் கேட்ட கேள்வி இதுதான், ஆதிகால கிறிஸ்தவர்கள் இயேசுவின் காலத்திற்கு பிறகு அவர் என்ன சொன்னதாக அவர்கள் எதை விசுவாசித்தார்கள் என்பது எப்படி தெரியும்?எதை பற்றிக்கொண்டிருந்தார்கள்? எதுவரைக்கும் நம்மால் போகமுடியும்? அந்த கிறிஸ்தவர்கள் எதை விசுவாசித்தார்கள் என்பதை எடுத்துசொல்லும் சில வரலாற்று ஆதார ஆவணங்கலை பற்றி பார்த்துக்கொண்டிருக்கிறோம். சரி, சிலருடைய கருத்துபடி கிறிஸ்து தெய்வத்துவம் தேவன் போன்ற காரியங்கள் அனைத்தையும் மனிதர்களே உருவாக்கிகொண்டதாக கூறுகின்றனர். சரி, நமக்கு ஆரம்பத்தில் கிடைத்த தகவல் இதுதான் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். இப்போதும் நாம் ரோமர் 1:1-6 ராய் பார்க்க இருக்கிறோம். இது கிபி 57ல் எழுதப்பட்டது. இயேசு 30களில் மரித்திருந்தால், 27 ஆண்டுகளுக்கு பின்பு எழுதப்பட்டது என்பதுதான் உண்மை, சரி. இதில், “இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரனும் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனும் தேவனுடைய சுவிஷேஷத்திர்க்காக பிரித்தெடுக்கப்படவனுமாகிய பவுல், தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய் பரிசுத்த வேதாகமங்களில் வாக்குத்த்தம்பண்ணினபடி,” இதை, கவனிங்க, “இயேசுகிறிஸ்துவை குறித்து, மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும்,” அவர் ஒரு மனிதன், “பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனாயிருக்கிறார்.” டேரல், இதைப்பற்றி சொல்லுங்க.

**Dr. டேரல் பாக்:** சரி, இது உபதேச சுருக்கமாகும். 1 கொரிந்தியர் 15தை போன்றது. சபைக்கு செல்லும் ஒவ்வொருவருக்கும் இருக்கும் 3 நிலைகளை கொண்ட ஆதிகால ஆதாரமாக இருக்கிறது. அவற்றில் உபதேசதிற்கு சம்பந்தமானவைகளும் இருக்கும். சிலது கீர்த்தனைகள் பாடல்களாக இருக்கும், 3 வது வகை மத சடங்குகள், கர்த்தருடைய பந்தி மற்றும் ஞானஸ்நானம் போன்றவை. இவை அனைத்தும் இறையியலின் சாராம்சத்தை போதிக்கிறது. இவை அனைத்தும் ஆதினாட்களில் இருந்தே இருந்துவருகிறது. இந்த பகுதியில் முக்கியமான காரியம் என்னவென்றால் இயேசு மனிதனுடைய நிலையில் இருக்கிறார், தாவீதின் வம்சத்தான், என்று சொல்லப்படுகிறது, தொடர்ந்து வாசித்து பாருங்கள், “ரூபிக்கப்பட்ட, இது ஹாரிசோ என்றிருக்கிறது, தேவனுடைய குமாரனென்று ரூபிக்கப்பட்டார். வெளிப்படுத்தப்பட்டார், அல்லது உயிர்த்தெழுதல் மூலமாக தேவனுடைய குமாரன் என நிருபிக்கப்பட்டார். ஏனென்றால் உயிர்த்தெழுதலானது இயேசு தன்னை குறித்து சொன்ன அனைத்தும் தேவ திட்டமென நிரூபிக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, அப்போதுதான் அவர் ஏற்றுக்கொள்ளப்பட்டார் என்று சொல்லப்படவில்லை. இங்கு அப்படிப்பட்ட வார்த்தை சொல்லப்படவில்லை. இது முற்றிலும் வேறு வார்த்தை. இங்கு இவர் அறியப்படுகிறார்.

**Dr. டேரல் பாக்:** அதுதான் சரி. பூமியின் எல்லைக்கும் வானத்திற்கும் இடையில் பிரித்துகாட்டும்படியாக கொடிடப்படுவது போலவே, இயேசு யார் என்பதை உயிர்த்தெழுதல் வேறுபிரித்து காட்டுகிறது. அது நெடுஞ்சாலை பெயர் பலகையை போன்றது, “இவர்தான் இயேசு. இதற்கு என்ன அர்த்தம் என்று பாருங்கள்.”

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, அதை பற்றிக்கொள்ள வேண்டும், அதாவது, உயிர்த்தெழுதல், அது உங்களுக்கு ஒரு விஷயத்தை சொல்லுகிறது. ஒரு உங்களிடம் யாராவது, சரி, உண்மையில், இது, 20 ஆண்டுகள் அவர்கள் உருவாகியது என்றிடலாம்.”

**Dr. டேரல் பாக்:** சரி, இது நாம்மை ஆரம்ப காலத்திற்கு நடத்திசெல்லும் உபதேச சுருக்கமாக இருக்கிறது. சரி, இப்ப, பவுலின் அனுபவத்திற்கு நேராக செல்கின்றோம். 30களில் சம்பவித்த இந்த நிகழ்வுகளுக்கு பிறகு 2 வருடங்கள் கழித்து பவுலுக்கு சம்பவிக்கும் காரியம். அவன் தமஸ்குவுக்கு போகும் வழியில் இயேசுவை சந்திக்க அவனுடைய இறையியல் கண்ணோட்டம் மாறுகிறது, ஏன்னா இயேசு பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் நபராக பிரசங்கிக்கப்பட்டிருந்தார். இயேசு உயிரோடிருக்கிறார் என்று அப்போஸ்தலர்கள் பிரசங்கித்து கொண்டிருந்தனர், கல்லறை காலியாக இருந்தது, உயிர்த்தெழுதல் உண்மையில் சம்பவித்தது. எனவே இதன் அடிப்படையிலான அப்போஸ்தலர்களின் செய்தியோடு பவுலின் கூற்றுகள் இணைத்திருந்தது, மேலும் நாம் சொல்லிக்கொண்டிருந்த இடைவெளி என்பது 20-60 ஆண்டுகள் வரைக்கும் இருந்தது போல தெரிந்தது, ஆனால் திடீரென்று அது மறைந்துபோனது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. நம், நேயர்களுக்கு, பாடல்கள் பிடிக்கும், சரியா? ஆதி கிறிஸ்தவர்கள் வசனங்களை பெறுவதற்கு முன்பு பாடல்களை விரும்பினர், ஓகே. அந்த பாடல்களில் சிலது வசனங்களானது. அதில் ஒன்றை பார்க்கலாம், சரியா. பிலிப்பியர் 2, அதில் சொல்லப்படுகிறது, “இயேசுகிறிஸ்து, தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்கு சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். அவர் மனுஷ ரூபமாய் காணப்பட்டு மரணபரியந்தம் அதாவது சிலையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீலாநோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும் பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்கு தந்தருளினார்.” இது ஒரு கீர்த்தனை.

**Dr. டேரல் பாக்:** இது ஒரு கீர்த்தனை, அல்லது இதை கீர்த்தனை பாடலாக எடுத்துக்கொள்ளலாம். அது கீர்த்தனையாக இல்லாவிட்டாலும், உபதேசத்தின் சுருக்கமாக இருக்கிறது. இந்த பகுதியின் செய்தி மறுக்கமுடியாத ஒன்றாகும். இந்த பகுதியின் கடைசி பாகம், முழங்கால் யாவும் முடங்கும், நாவுகள் யாவும் அறிக்கையிடும், இது ஏசாயா 45ஐ எதிரொலிக்கிறதாக இருக்கிறது. சரி, எபிரேய வசனங்களில் இந்த ஏசாயா 45 ஒரே தேவன் என்பதை பலமாக சொல்லும் ஒரு அருமையான தற்காப்பு வசனகளில் ஒன்றாக இருக்கிறது. ஆதி திருச்சபையில் வசனங்கள் இருந்தது. எபிரேய வசனங்கள் இருந்தது. அப்போது அவர்களிடம் புதிய ஏற்ப்பாடு கிடையாது. அப்படின்னா

புதிய ஏற்ப்பாடு வருவதற்கு முன்பு அவர்கள் எப்படி இறையியலின் சாராம்சத்தை வெளிப்படுத்தி போத்திருப்பார்கள்? அந்த கேள்விக்கு தான் நாம பதில் ஸொல்லிக்கொந்டிருக்கிஒம்.

இது ஏதோ அந்த இடைப்பட்ட காலத்தில் அப்படியிப்படியாக உருவானது கிடையாது. ஆதியில் இருந்த இறையியலை அவர்கள் பிரதிபலிக்கிறார்கள், இது ஆரம்ப காலத்திலிருந்தே இருக்கிறது. இந்த கீர்த்தனைகள் அனைத்தும் இந்த காரியத்தை உணர்த்தும்படியாக ஆராதனைகளில் பாடப்படும் துதி பாடல்கள். இப்ப, என்ன நடந்ததென்று கவனியுங்கள். இஸ்ரவேலின் தேவன் – முழங்கால் யாவும் முடங்கும், நாவுகள் யாவும் அறிக்கையிடும். இதைதான் எபிரேய வசனம் கூறுகிறது – இந்த மகிமை இயேசுவுக்கு உயிரது என்று விளக்கி சொல்லப்படுகிறது, அவருக்கு தான் இந்த ஸ்தானம், இந்த கணம் அவருக்குரியது. இதன் விளைவாகத்தான், நாம் அறிந்திருக்கிற சில கூற்றுகள் உருவானது, அதாவது இயேசு பிதாவின் வலது பாரிசத்தில் இருக்கிறார் என்பதை சபையில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ல்சிகளிலும் போதனைகளிலும், பாடல்களிலும், அவரை ஆராதிக்கும் எல்லா ஆராதனைகளிலும் மற்ற எல்லாவற்றிலும் இதை  மையமாக வைத்தே செயல் படுகிறோம்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** சரி, சில விமர்சகர்களின் கருத்து, அதாவது, மிகவும் மேம்படுத்தப்பட்ட  கிறிஸ்துவை பற்றிய இந்த உபதேசம் மூன்றாம் நான்காம் நூற்றாண்டுவரை எழுத்தின்படி நமாமி வந்து அடையவில்லை, சரியா. கொலோசெயரில் சொல்லப்பட்ட ஒன்றை உங்களுக்கு சொல்கிறேன் இந்த இறையியல் எவ்வளவு மேலானது என்பதை அறிந்துகொள்ள உதவிடும். கொலோசெயர் 1:15 கூறுகிறது, “அவர்” இயேசுவை பற்றி சொல்கிறது, “அதரிசனமான தேவனுடைய ரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. பரலோகத்திலும் பூலோகத்திலும் உள்ளவைகள், கானாப்படுபவை காணப்படாதவை, சிங்காசனங்களும் கர்த்தத்துவங்களும், துரைத்தனங்கள் மற்றும் அதிகாரங்கள், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர் எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது.” சரி, அவர் முந்தின பேறுமானவர் என்பதற்கு அர்த்தம் என்ன?

**Dr. டேரல் பாக்:** சரி, அடிப்படையாகவே அவர்தான் முதன்மையானவர். அவர்தான் ஏணியின் மேலப்படி. ஏணியின் மேலே இருப்பவர்தான் எல்லாவற்றையும் உண்டாக்கினவர்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** முதலிடம் அவருக்குதான்.

**Dr. டேரல் பாக்:** அதுதான் சரி. அதை பற்றி தான் பேசிக்கொண்டிருக்கிறோம். இங்க சொல்லப்பட்டிருப்பது போலவே, அதிலும், 1 கொரிந்தியர் 8 ளும் சொல்லப்பட்டிருக்கிறது, இயேசுவை சிருஷ்டிகர் என்று கண்ணோட்டத்தில் பார்க்கிறோம். இந்த பகுதிகளை பற்றிய முக்கியமான காரியம் என்னவென்றால், சிலசமயங்களில் இதை பற்றி நாத்திகர்கள் சொல்லும், காரியம், சரி, பவுல் கொலோசெயரை எழுதவில்லை, அவன் அதை நம்பவே இல்லை என்பார்கள். ஆனா 1 கொரிந்தியர் எட்டு இருக்கிறதே, பவுல்தான் 1 கொரிந்தியரை எழுதினார் என

எல்லாருக்கும் தெரியும் ஆதாரமும் இருக்கிறது. இப்போது நாம் பார்க்கிற விஷயம் என்னவென்றால் 1 கொரிந்தியரில் சொல்லப்பட்ட காரியங்களுக்கும் கொலோசெயரில் சொல்லப்பட்டிருக்கிறவைகளுக்கும் சம்பந்தம் உண்டென்று உறுதியாகிறது. நாம் பவுலின் நிருபங்களோடு இசைந்து செல்கிறோம் என்று நினைப்பதற்கு இது முக்கிய காரணமாக இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. இந்த பகுதிகள் அனைத்தும், அவர் மனிதனாகவும் தேவனாகவும் இருக்கிறார் என்கிறது. அவர்தான் சிருஷ்டிகர். அதாவது, இதை மறுக்கமுடியாது. எல்லாருக்கும் பந்தியை பற்றி தெரியும், கர்த்தருடைய பந்தி, ஓகே. ஆதிகால பதிவுகளை பார்க்கலாம். அது என்ன சொல்கிறது என்று நினைக்கிறார்கள்? 1 கொரிந்தியர் 11றை பார்க்கலாம் பவுல் அங்கு கர்த்தருடைய பந்தியை பற்றி சொல்லுகிறார், "நான் உங்களுக்கு ஒப்புவித்ததை கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன், என்னவெனில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி அதை பிட்டு இதை வாங்கி புசியுங்கள் இது உங்களுக்காக பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது, என்னை நினைவுகூரும்படி இதை செய்யுங்கள் என்றார். அந்தபடியே அவர் பாத்திரத்தையும் எடுத்து, இது என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது, இதை பானம்பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதை செய்யுங்கள் என்றார். நீங்கள் இந்த அப்பத்தை புசித்து இந்த பாத்திரத்தில் பானம்பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தை தெரிவிக்கிறீர்கள்." இங்க என்ன நடக்குது?

**Dr. டேரல் பாக்:** இது, சுவாரஸ்யமான ஒன்று, ஏன்னா நம்முடைய சார்பில் இயேசு தமது மரணத்தில் செய்தவற்றை நினைவுபடுத்துகிறது. தன்னுடைய வாழ்க்கையை தரிசனத்தை நோக்கத்தை பற்றி இயேசு கடைசியாக பந்தியிருந்த போது சொன்னவற்றை நினைவுபடுத்துகிறது. இதில் சுவாரஸ்யமான காரியம் என்னவென்றால் இந்த பந்தியின் பொது சொல்லப்பட்டவைகளை பற்றிய 2 விதமான பதிவுகள் இருக்கிறது. மத்தேயு மற்றும் மாற்கில் இருக்கிறது, "இந்த இரத்தம் என் இரத்த்ததினாலாகிய உடன்படிக்கை." புதிய என்ற வார்த்தை அங்கு சொல்லப்படவில்லை. லூக்காவிலும் பவுலின் எழுத்துகளிலும் "புதிய உடன்படிக்கை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வித்தியாசம் மாறுபட்ட கருத்தை வெளிப்படுத்துவதுபோல இருக்கிறது. ஆனால் இந்த வித்தியாசம் ஒரு பெரிய வித்தியாசமே கிடையாது. அதாவது இயேசு இருந்த காலத்தில் நடைமுறையில் இல்லாத புதிதாக அமைக்கப்படவேண்டியதாக இருந்த ஒரே உடன்படிக்கை இந்த புதிய உடன்படிக்கைதான். எனவே சிறிய பகுதிகளில் சொல்லப்பட்டவைகளின் உள்ளார்ந்த அர்த்தத்தை சில வேலைகளில் வார்த்தைகளின் மாறுபாடு குறைத்து காண்பிக்கும் சூழ்நிலைகள் உருவாகிறது.

ஒன்றுக்குஒன்று  எப்படி வேறுபட்டதாக இருப்பதற்கான இன்னொரு உதாரணமும் இருக்கிறது. அது எப்படி ஒன்றோடு ஒன்று இசைந்து பிணைக்கப்பட்டிருக்கிறது என்பதை கவனிக்க வேண்டுமே தவிர, ஒன்றுக்கு ஒன்று எப்படி புரன்பாடாக இருக்கிறதென பார்க்க அவசியமில்லை. இதில் நாம் கவனிக்க வேண்டிய இரண்டாவது காரியம் இந்த மதசடங்குகளில் இறையியலின் சாராம்சத்தை பெறுகிறோம், ஞானஸ்நானமும் அப்படிதான். அது கழுவப்பட்டு திரும்பவும் வாழ்வடைவதற்கு ஒப்பாக இருக்கிறது, புதிய

ஜீவியத்திற்காக சுத்திகரிகப்படுதல், இப்போது நான் கழுவப்பட்டிருக்கிறேன், கர்த்தருடைய ஆவியானவர் என் வாழ்வில் பிரவேசித்திடுவார், இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் என்ற உறுதியை பெற்றவனாக இப்போது என்னால் தேவனோட நடக்கும் அனுபவத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** டேரல், இது அருமையான காரியம். கேட்டுக்கொண்டிருப்பவர்களுகாக சுருக்கமா சொல்லுங்க, இப்ப நீங்க சொன்ன விஷயத்தின் முக்கியத்தும் என்ன? ஆதி கிறிஸ்தவர்கள் எதை விசுவாசித்தனர் என்பதற்கான ஆதாரங்களை தேடும் மாணவர்களை இது எப்படி ஊக்குவித்திடும்?

**Dr. டேரல் பாக்:** இரத்தின சுருக்கமாக இறையியலின் மையப்பொருள் சொல்லப்பட்டிருக்கிறது என்கிறோம், உபதேச போதனையாக, பாடல்களில், கீர்த்தனைகளில், புனித நூல்களில், சபை அங்கம் வகித்த எல்லா விதத்திலும் சொல்லப்படுகிறது. இது எல்லாரும் பங்குவகிக்கும் ஒரு செயலாக இருக்கிறது. இது ஏதோ அங்குமிங்கும் ஒருவர் போதித்து சொல்கிற ஒன்றல்லா, இரகசியம் அல்ல, வெளிப்படாத புதைபோரும் அல்ல. இதைதான் மறையியல் கிறிஸ்தவத்தில் நீங்கள் பார்ப்பீர்கள். இது எல்லாருக்கும் வெளிப்படுத்தப்பட்ட ஒரு காரியம். ஆதிகாலம். இறையியலின் மையம். புதிய ஏற்ப்பாடு வருவதற்கு முன்பே போதிக்கப்பட்ட இறையியல். இறையியல் வெளிப்படும் முன்னமே ஆதியிலிருந்து அதின் மையப்பொருள் முன்குறிக்கப்பட்டிருந்ததை காட்டுகிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், அடுத்த வாரமும் தொடர்ந்து பார்க்க இருக்கிறோம். வேறொரு கேள்வியை முன்வைக்க போகிறோம். யோசித்து பாருங்கள். இயேசு இந்த இடத்தை விடு கடந்துபோனார், 12 அப்போஸ்தலர்கள் இருக்கிறார்கள், அப்போது புதிய ஏற்ப்பாடு கிடையாது. இயேசு போனபிறகு எப்படி ஆதிகால கிறிஸ்தவர்கள் ஒரு தீர்மானத்திற்கு வந்தார்கள், எங்கிருந்து எல்லாவற்றையும் கற்றுக்கொண்டனர், அப்போஸ்தலர்களின் நிருபங்கள், புத்தகங்கள், எப்படி இவையனைத்தும், பழைய ஏற்ப்பாட்டின் வசனகளுக்கு ஈடானவை என்று முடிவு செய்தனர்? புதிய ஏற்ப்பாடு என்னும் பகுதி எப்படி உருவானது, 27 புத்தகங்கள்? இது சுவாரஸ்யமான விஷயம்தான். அடுத்த வாரம் இணைந்திருப்பீர்கள் என நம்புகிறேன்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.